# PHOTO COMPRESSION-AN ESSENTIAL SOFTWARE.

அன்பார்ந்த பொறியாளர் நண்பர்களே, இன்றைய சூழலில் எந்த ஒரு Proposal அனுப்புவதாக இருந்தாலும் புகைப்படம் மெயிலில் அனுப்ப வேண்டியது மிக அத்தியாவசியமான ஒன்றாகி விட்டது. அதில் நம் பொறியாளர்கள் அடையும் சிரமத்தை போக்கவே இக்கட்டுரை.

பொதுவாக Digital Photos தற்போது உள்ள Camera-க்கள் மற்றும் Celphone மூலம் எடுக்கும் போது 1MB முதல் 5MB வரை ஆகின்றன. இவ்வாறு பல புகைப்படங்களை மொத்தமாக அனுப்பும்போது அது முடியாத ஒன்றாகி விடுகிறது. (It takes more time and money to upload & download) உதாரணத்திற்கு gmail-இல் 25MB-க்கு அதிகமாக அனுப்ப முடியாது. அதுபோன்ற தருணங்களில் புகைப்படத்தின் தரம் குறையாமல் அதன் அளவை குறைத்து அனுப்ப வேண்டிய சூழல் உருவாகிறது. நம் பொறியாளர்களில் பலர் கணிணியுடன் அதிக தொடர்பு உள்ளவர்கள் உட்பட புகைப்படத்தை Compress செய்ய தெரியாமல் சிரமப்படுவதை பார்த்திருக்கிறேன். சிலருக்கு இது தெரிந்திருக்கலாம். இருப்பினும் தெரியாத பலருக்கு இது மிக உதவியாக இருக்கும்.

நீங்கள் Compress செய்ய விரும்பும் புகைப்படத்தை ஒருமுறை கிளிக் செய்து அது செலக்ட் ஆனவுடன் அதன் மீது Right Click செய்தால் புகைப்படம்-1இல் உள்ளது போல் ஒரு Box திறக்கும். அதில் Open with என்பதற்கு நேரே மவுஸ் கொண்டு சென்றால் உங்கள் கணிணியில் புகைப்படம் திறக்க உதவும் அனைத்து Software –ம் தோன்றும். அதில் Microsoft office Picture Manager என தோன்றும் Software ஐ click செய்யவும்.

தற்போது புகைப்படம் 2-இல் உள்ளது போல் திறக்கப்படும். அதில் புகைப்படத்தின் மேல் புறத்தில் Edit Pictures எண்ணும் Icon ஐ click செய்யவும் . அதில் Change Picture size என்னும் தலைப்பின் கீழ் Compress Pictures எண்ணும் கட்டம் இருக்கும். அதை click செய்தால் புகைப்படம் -3 இல் உள்ளது போல் மீண்டும் வலது புறம் ஒரு Box திறக்கப்படும். ஆதில் உங்களுக்கு தேவையான அளவிற்கு புகைப்படத்தை Compress செய்யலாம்.

பொதுவாக Compress for என்பதற்கு கீழ் உள்ள Documents எண்ணும் பட்டனை click செய்து படத்தின் தரம் குறையாமல் அளவை குறைத்துக்கொள்ளலாம்.

உதாரணத்திற்கு படத்தின் Original size (2560 x 1920) 1740KB என்று இருப்பதை Documents மூலம் (1024x768) 253 KB அளவிற்கும், Web page மூலம் (448x336) 26KB ஆகவும் குறைக்கமுடியும். ஆனால் பொதுவாக Documents சிறந்த பலனைத்தரும்.

பின்னர் அதே Box இன் அடிப்பகுதியில் உதாரணத்திற்கு (Original 1.74MB, Compressed 245 KB என வரும்) அதற்கு கீழ் உள்ள OK பட்டனை கிளிக் செய்தால் படம் Compressed ஆகி தயாராகிவிடும். தற்போது மேல்பகுதியில் இடது ஓரம் உள்ள File என்பதை click செய்து save as என்பதை Select செய்து வேறு பெயரில் Save செய்து கொள்ளவும். இப்போது படத்தின் வலது ஓரம் உள்ள close icon ஐ click செய்து "don't save" என்று கொடுத்தால், உங்கள் Original file அப்படியே இருந்து விடும்.

BY ER.G.MANUNEETHI.

ADE (Q.C) THENI-9442557571










BY ER.G.MANUNEETHI

ADE (Q.C) THENI-9442557571